**கவனிக்க.–** *2007.03.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1491 - 2007 මාර්තු 30 වැනි සිකුරාදා - 2007.03.30

*1491 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 210 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | – | ஏல விற்பனைகள் | 210 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | – | நானாவித அறிவித்தல்கள் | – |


**கவனிக்க.–** (i) உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஓலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) ஜப்பானிய மொழிக் கல்வி நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2007, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஏப்பிறல் 05 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மாச்சு 23 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுதல்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 333/5, 1 ஆம் குறுக்கு, 2 ஆம் ஒழுங்கை, கடற்கரை வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு எனும் விலாசத்தில் வதியும் திரு. மூத்ததம்பி உதயகுமாரன் ஆகிய நான், (தேசிய அடையாள அட்டை இலக்கம் - 671112326 V) நொத்தாரிசு கட்டளைச் சட்டம் அத்தியாயம் 107 (தற்போது அத்தியாயம் 110) இன் முதலாவது அட்டவணையை "ஆ" பகுதியில் இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இவ் வருட இறுதியில் நடைபெறவிருக்கும் நொத்தாரிசு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகவும் அதன் பலனாக தமிழ் மொழி மூல நொத்தாரிசு ஆக தெரிவாவதற்காகவும் அனுமதி பெறுவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் ஒன்று செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

திரு. மூத்ததம்பி. உதயகுமாரன்,

3-804

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பதுளை, ஸ்பிரின்வெலி, கோட்டேகொட, இரஞ்சித் ஸ்டோர்ஸ்சில் பதிவாயிருந்து இப்போது 734/27/A தெவட்டகஹாவத்த, வத்தளை என்ற முகவரியில் வசிக்கும் போரகே பொடிஹாமினே ஆகிய என்னால் 2005.10.21 ஆந் திகதி பாணந்துறை ஆர். ஏ. காமினி டீ பெரேரா சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு முன்னிலையில் ஒப்பமிட்டு பதுரலிய ஹெடிகல்ல குடியேற்றத் திட்டத்தில் சமகிபுரவைச் சேர்ந்த ஹப்புஹெட்டிகே தொன் ஆரியவன்ச என்பவருக்கு எனது எல்லா தொழிற்பாடுகளையும் செய்வதற்கான உரிமை வழங்கப்பட்ட 142 ஆம் இலக்க அட்டோர்ணி தத்துவம் 2007.01.01 ஆந் திகதி தொடக்கம் என்னால் இரத்துச் செய்யப்படுகின்றதெனவும் இனிமேற்பட அவரால் என் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக் கும் பொது மக்களுக்கும் அறிவிக்கின்றேன்.

பி. பொடிஹாமினே.

3-790

## அட்டோர்ணி அதிகாரப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான விளம்பரம்

பன்னிபிட்டிய, பிராக்மன கம பொது ஜன மாவத்தையில் இல. 79/1 இல் வசிக்கும் வெல்ஏனகே சுமத்ரா குமுதினி த சில்வா ஆகிய நான், 2003.10.04 இல் பன்னிப்பிட்டிய மொரகடிய ருக்மல் வீதியில் இல. 595/1 இல் வசிக்கும் சவும்யா பிரியாணி த சில்வாவுக்கு இல. 2550 கீழ் பிரதான நொத்தாரிசு (N. P.) H. M. S. திசாநாயக அவர்களால் சட்டபூர்வமாக எழுதி அங்கீகரிக்கப்பட்டு கொடுத்த அட்டோணி அதிகாரப்பத்திரத்தை 2007.03.16 இல் இருந்து இரத்துச் செய்துள்ளேன் என இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

வெல்ஏனகே சுமத்ரா குமுதினி த சில்வா.

3-845

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஜெர்மனி 40789 மொன்ஹைம்/ரியின் 40789 (MON/HEIM/RHEIN) 20 ரொபர்ட் - கோச் ஸ்ட்ரீட்டைச் சேர்ந்த திருமதி அல்மட் கேர்ட்ரட் மார்கரட் ஹிம்மல்ஸ்பாச் என்பவரின் பெயருக்கு அளுத்கம, களுவாமோதர, கம்மெத, கம்மெத வீதி, 221 இலக்கத்தைச் சேர்ந்த சிரியன் சண்டிமால் டீ சில்வா யொம்மெரென்னகே என்பவரால் வழங்கப்பட்ட களுத்துறை பகிரங்க நொத்தாரிசு திரு. எம். ஆர். ஹைதர் ஹஸன் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2006, ஓகத்து 18 ஆந் திகதிய 146 ஆம் இலக்க அட்டோர்னி தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளதாக இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. கூறப்பட்ட அட்டோர்ணி தத்துவம் மூலமாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் கீழே ஒப்பமிட்டுள்ளவர் பொறுப்பாக மாட்டார்.

சிரியன் சண்டிமால் டீ சில்வா யொம்மெரென்னகே.

3-829

# ஏல விற்பனைகள்

## பொலிஸ் உத்தியோகபூர்வ மிருக பிரசித்த ஏலவிற்பனை

ஸ்ரீலங்கா பொலிஸ் திணைக்களத்திற்குச் சொந்தமானதும், சேவையிலிருந்து நீக்கப்பட்ட 08 உத்தியோகபூர்வ மிருகங்கள் (நாய்கள்) 2007.04.03 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு அஸ்கிரிய பொலிஸ் உத்தியோகபூர்வ மிருக தலைமை ஸ்தானத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

இவ் உத்தியோகபூர்வ மிருகங்களை (நாய்களை) 2007.04.02 ஆந் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 15.00 மணிவரை பரீட்சித்து பார்க்க முடியுமென அறியத்தருகின்றேன்.

| | இனம் | ஆண்/பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| * | லெம்புடோ ரிட்ரிச்ச | பெண் | 01 |
| * | ஜேர்மன் ஷெப்பர்ட் | ஆண் | 02 |
| * | ஜேர்மன் ஷெப்பர்ட் | பெண் | 03 |
| * | ரோட்வயலர் | ஆண் | 01 |
| * | தெமுஹுன் (டொபமன் மற்றும் ஜேர்மன் ஷெப்பர்ட்) | ஆண் | 01 |
| | | | 08 |

3-769

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

பன்னிப்பிட்டிய, அரவ்வல வீதி, இல. 281/2A இல் 281/2, கே. டொன் அமரதாச என்பவருக்குச் சொந்தமான பெறுமதியான காணி ஏல விற்பனை

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 3றூ. 22பே.)**

பன்னிப்பிட்டிய, அரவ்வல, இல. 289, கன்டனகே டொன் அமரதாச என்பவரால் 94,61,48,000 ரூபா கட்டணத்தையும் முழுமையாகச் செலுத்தி முடியும் வரை வருடத்துக்கு 24% வீத வட்டியையும் வழக்கு செலவு மற்றும் ஏலதாரர் கட்டணங்களையும் வசூலிப்பதற்காக கொழும்பு யூனியன் பிளேஸ், 277 சிலிங்கோ வென்ஷர் கெபிட்டல் லிமிட்டெட் நிறுவனத்தால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 16993/MB இலக்க வழக்கில் எனக்கு வழங்கப்பட்ட கட்டளைப் பிரகாரம் நான் கீழ்க்கண்ட சொத்தை 2007, ஏப்பிறல் 26 மு. ப. 11.00 க்கு அதே இடத்தில் ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**ஆதனத்தின் விவரணம்.**-மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லேபத்து, பன்னிப்பிட்டிய, பிலியந்தலை பிரதான வீதி வழியாக அரவ்வலயில் அமைந்த அளுபோகாவத்த என்றழைக்கப்படும் காணியின் அனுமதி பெற்ற அளவையாளர் மேர்வின் சமரநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1980, திசெம்பர் 10 ஆந் திகதியும் 120 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தில் துண்டுகள் 1, 2, 3 எனக் குறிப்பிடப்பட்ட தொடரான எல்லா காணிகளும், கூறப்பட்ட 1, 2, 3 இலக்கங்கள் கொண்ட காணித்துண்டுகள் வடக்கில் : பிலியந்தலை - பன்னிப்பிட்டிய பிரதான வீதியாலும் ; கிழக்கில் : எம். ஈ. சந்திரபால என்பவரின் அளுபோகாவத்த காணியாலும் ; தெற்கில் : நெற் காணியாலும் ; மேற்கில் : K. டொன் டேனியல் என்பவரின் அளுபோகாவத்த மற்றும் தெவட்டகாவத்த காணியாலும் சூழப்பட்டு மூன்று றூட் இருபத்து இரண்டு பேச்சு (0ஏ. 3றூ. 22பே.) விஸ்தீரணம் கொண்டதாக கொழும்பு காணிப்பதிவகத்தில் M1547/ 1 65 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சொத்தை அடையும் வழி.**- பன்னிப்பிட்டிய-மோரகெட்டிய சந்தியிலிருந்து அரவ்வல வீதி வழியாக 2 கி. மீ. வரை சென்றால் பன்னிப்பிட்டிய - பிலியந்தலை மெயின் வீதிக்கு எதிராக 281/ 2 A இலக்கம் கொண்ட சொத்தை அடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனை முடிவில் உத்தேச கொள்வனவுதாரர் கீழ்க்கண்ட கட்டணங்களை ரொக்கமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) உள்ளூர் அதிகார சபைகளுக்கான 1% கட்டணமும் வற் வரியும் ;
(3) 2 1/2% ஏலதாரர் கமிஷன் ;
(4) இலிகிதர் கட்டணம் மற்றும் கூவுவோர் கட்டணமும் ;
(5) நொத்தாரிசு மதிப்பீட்டு கட்டணம் 2,000.

மிகுதி 75% வீதமான கட்டணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கின் மேல் வைப்பு செய்தல் வேண்டும்.

மேற்கொண்டும் விபரங்களுக்குத் தயவு செய்து "கொழும்பு 1, ஜனாதிபதி மாவத்தை, 69, சிலிங்கோ டெவலப்மன்ட் வங்கி, திரு. D. தென்னக்கூன்" என்பவருடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இலக்கங்கள் : 2388388/0777222457

ரஞ்ஜித் எஸ். மஹாநாம,
ஜே. பி. (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
அனுமதி பெற்ற ஏலதாரர்.

ஆர். எஸ். எம். ஒக்ஷன்,
மஹாநாம டிரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி : 2863121

3-807

---

## வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி

1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**ஆதனம் ஏலவிற்பனை**

கணக்கு இல. 1046 5001 6300 - கே. டி. விக்கிரமபால.

2007.03.23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2005.07.22 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2005.01.20 ஆந் திகதியிடப்பட்ட, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற் கமைய, பன்னிரண்டு இலட்சத்து பதினைந்தாயிரம் ரூபா (ரூபா 12,15,000) ஐ மேலும் 2004, செத்தெம்பர் 2 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை பதினொரு இலட்சத்து அறுபத்தெண்ணாயிரம் ரூபா மட்டும் (ரூபா 11,68,000) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினாறு தசம் ஐந்து சதவீத (16.5%) வட்டியுடனும் உறப்பட்ட விளம்பரச் சலெவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் வவிரிக்கப்பட் டுள்ள ஆதனத்தை, கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 2007.04.19 ஆந் திகதி பி. ப. 01.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பாசறை பிரிவு, பாசறை கோறளை, தலபோவத்தை, பள்ளேகமவில் அமைந்துள்ளதும் "கொரக்கஹலந்தேவத்தை" (பாகம்) என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான காணி முழுவதும் அதன்கண் அமைந்திருக் கும் கட்டிடங்கள், பயிர்ச்செய்கை மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து இதன் எல்லைகளாவன - வடக்கு : எம். ஏ. டொன் சுகததாசவினால்

உரிமைகோரப்படும் காணி ; கிழக்கு : மேற்கூறப்பட்ட காணியின் மீதித்துண்டு ; தெற்கு : மேற்கூறப்பட்ட காணியின் மீதித்துண்டைப் பிரிக்கும் வேலி மற்றும் ; மேற்கு : மேற்கூறப்பட்ட காணியின் மீதித் துண்டைப் பிரிக்கும் வேலி என்பவையாகும். மேற்கூறப்பட்ட காணி ஐந்து ஏக்கர் (5ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுடையது, இந்தக் காணி பதுளை காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம்/பீ50/274 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் காமினி சமரக்கொடி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990 ஓகத்து 2 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1029 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அயைடானமிடப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன். மேற்கூறப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன - வடக்கு : கொரக்கஹாலந்த வத்தையின் மிகுதித் துண்டு பிரிக்கும் வேலி ; கிழக்கு கொரக்கஹலந்த வத்தையின் மிகுதித் துண்டைப் ; தெற்கு: கொரக்கஹலந்த வத்தேயின் மிகுதித் துண்டு ; மேற்கு: கொரக்கஹலந்தே வத்தையின் மிகுதித் துண்டு என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 1029 இற்கமைய இந்தக் காணி ஐந்து ஏக்கர் (5ஏ. 0றூ. 0பே.) அல்லது 2.024 ஹெக்டயார் விஸ்தீரணமுடையது,

மேற்கூறப்பட்ட காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் காமினி சமரக்கொடி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990 ஓகத்து 2 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2536 இல் (அதே உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் காமினி சமரக்கொடி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990 ஓகத்து 2 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் 1029 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அயைடாளமிடப்பட்ட காணித்துண்டு) கீழ் கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது:-

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பாசறை பிரிவினுள் பாசறை கோரளை இல் தளபோவத்த பள்ளேகம கிராமத்தில் அமைந்துள்ள "கொரக்கஹலந்த வத்த" என அழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு நிலஅளவை வரைபடம் இல. 2536 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அயைடாளமிடப்பட்டதுமான காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த சகலதுடன். மேற்கூறப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன - வடக்கு : கொரக்கஹலந்த வத்த ; கிழக்கு : கொரக்கஹலந்த வத்த ; தெற்கு : கொரக்கஹலந்த வத்த மற்றும் ; மேற்கு : கொரக்கஹலந்த வத்த. என்பனவாகும். மேற்கூறப்பட்ட காணி ஐந்து ஏக்கர் (5ஏ. 0றூ. 0பே.) அல்லது (2.024ஹெக்டயார்) விஸ்தீரணமுடையது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

3-843/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.